**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 119/2025**

**Deposition of LW2 examined as PW4** Dt. 22.07.2025

| | |
|---|---|
| Name | பாலமுருகன், Gr.I காவலர் (சோமரசன்பேட்டை காவல் நிலையம்) |
| Father's/Husband's Name | மாமுண்டி |
| Village | திருச்சி மாவட்டம் |
| Taluk | |
| Age | 38/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 22.07.2025

(A1,A2 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம் சோமரசன்பேட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2023 ம் தேதி இரவு 19.00 மணிக்கு மயிலாடுதுறை குடிமை பொருள் வழங்கல் குற்றபுலனாய்வு பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது குடிமை பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் ரமேஷ்கண்ணன் என்பவருக்கு தொலைபேசியில் ரகசிய தகவளாளி மூலம் தகவல் வந்தது. அதில் பூம்புகார் மெயின்ரோட்டில் புஞ்சை என்ற கிராமத்தில் SR பெட்ரோல் பங்கில் TN 51 AZ3935 என்ற பதிவெண் கொண்ட TATA ACE வாகனம் நின்று கொண்டிருப்பதாகவும் அதில் பொதுமக்களுக்கு விநியோகம் ரேசன் அரிசி மூட்டை மூட்டையாக வைத்திருப்பதாக தகவல் வந்தது. இரவு 19.00 மணிக்கு நானும், ஆய்வாளரும் மற்றும் தலைமை காவலர் ஞானசேகரன் சேர்ந்து சென்று பார்த்த போது மேற்படி TATA ACE வாகனம் நின்று கொண்டிருந்தது. அதன் அருகில் எதிரிகள் சத்தியசீலன் மற்றும் பிரசாந்த் என்பவர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் விசாரித்த போது TATA ACE வாகனத்தில் படுதாமூலம் மூடப்பட்டிருந்தை எடுத்து காட்டினார்கள். அதில் 35 கிலோ எடை கொண்ட 30 மூட்டைகள் தமிழக அரசால் பொது விநியோக திட்ட அரிசி இருந்தது. அவர்களை விசாரணை செய்த போது ரேசன் அரிசியை எங்கிருந்து வாங்கினீர்கள் என்று கேட்டதற்கு பூம்புகார் அருகில் உள்ள வீடுகளில் வீடு வீடாக சென்று வாங்கி அருகில் உள்ள கோழிப்பண்ணைகளுக்கு விற்பனை செய்வதாக தெரிவித்தனர். TATA ACE வாகனத்தில் மொத்தம் 30 மூட்டைகள் அரிசி காணப்பட்டது ஒவ்வொரு மூட்டையும் 35 கிலோ எடை கொண்டவை ஆகும். மொத்தம் 1050 கிலோ அரிசி. அந்த இடத்தில் அந்த சமயத்தில் பொதுமக்கள் யாரும் வராததால் தலைமை காவலர் ஞானசேகரன் மற்றும் எனது முன்னிலையில் சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தார். மேற்படி சம்பவத்தின் எதிரிகள் மற்றும் அரிசி வாகனம் ஆகியவற்றை

எங்களது காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து குற்ற எண் 64/2023 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம். மேற்படி அரிசியை சித்தர் காட்டில் உள்ள நுகர் பொருள் வாணிப கழகத்தில் ஒப்படைத்து ரசீது பெறப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது தான். **அந்த கையொப்பங்கள் மட்டும் முறையே அ.சா.ஆ. 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஆய்வாளருக்கு தகவல் கிடைத்த பின்னர் எத்தனை வாகனத்தில் சென்றீர்கள் என்றால், இரண்டு இரு சக்கர வாகனத்தில் சென்றோம் நானும் ஆய்வாளரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோம். முதல் விசாரணையில் தெரிவித்த பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் பெட்ரோல் பங்க் ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் அங்கு பணியில் இருந்தார்களா என்றால் சரிதான். வரைபடத்தில் டாடா ஏசி வாகனம் பெட்ரோல் பங்க் அலுவலகத்திற்கு எதிர்ப்புறம் நிறுத்தப்பட்டிருந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சாலையை ஒட்டி பெட்ரோல் பங்கிற்கு இடையே இருந்த பகுதியில் மேற்படி டாடா ஏசி வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. ஆய்வாளர் பெட்ரோல் பங்கில் இருந்த ஊழியர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் சாட்சியாக இருக்க மறுத்து விட்டார்கள். ஆய்வாளர் எத்தனை நபர்களிடம் சாட்சியாக இருக்க வலியுறுத்தினார் என்றால் நான்கு முதல் ஐந்து நபர்களிடம் கேட்டார். பொதுமக்கள் யாரிடமும் ஆய்வாளர் சாட்சியாக இருக்க கேட்டாரா என்றால் இல்லை. ஆய்வாளருக்கு ரகசிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் செல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் எந்த தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்திருப்பின் பெட்ரோல் பங்கின் சிசி டிவி கேமரா பதிவுகள் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததில் இருந்தே மேற்படி சம்பவம் உண்மை இல்லை என்பது தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. Rajavelu 22.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை

M.B.